முருகப்பெருமான் துணை

**மகான் பதஞ்சலியார் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

13.05.2022, வெள்ளிக்கிழமை

1. அருள்பலம் கொண்ட ஞானியே
அண்ணலாய் வாழும் தவசியே
பொருள்பலம் கொண்ட பூமியாய்
புண்ணிய வழியில் மாற்ற வேண்டி

2. வேண்டியே அவதரித்த அரங்கனே
வினவிட உன் பெருமை கூறி
உண்டான சுபகிருது தகர் திங்கள்
உயர்வான முப்பான் திகதி புகர்வாரம்
(சுபகிருது வருடம் சித்திரை மாதம் 30 ம் நாள், 13.05.2022 வெள்ளிக்கிழமை)

3. வாரமதில் பதஞ்சலியார் யானும்
வழங்குவேன் அருளாசிதன்னை
சோரமிலா ஞான உலகம் அமைய
சுருதிபடி அரங்கன் வழிவர மக்களை

4. மக்களை ஞானிகள் பூசையாக
மார்க்கமுடன் அழைப்புதர
தேக்கமின்றி தொடர்ந்து வர
தெய்வநெறி கண்டு சிறப்பர்

5. சிறப்புதரும் சக்திபல கூடி
செல்வாக்கும் எல்லா வளமும்
மறுப்பின்றி வரமாக அடைந்து
மக்களெல்லாம் ஞானவான்களாகி

6. ஆகியே அரங்கமகானின் ஞான
ஆற்றல் மிக்க தேற்றம் ஆகி
மகிழவே சத்சித் ஆனந்தம்
மரணமில்லாப் பெருவாழ்வும் அடைவர்

7. அடையவே கருணைக்கடலும்
அருட்பெருஞ் சுடரும் ஆன
இடர்வெல்லும் மகா ஞானி
ஏழாம்படைவீட்டு அரங்கன்

8. அரங்கனே முருகப்பெருமானின்
அவதார சூட்சுமமாக இருந்து
வரங்கள் பல மக்களுக்கு அருள
வையகத்தார் அடிபணிந்தால் போதும்

9. போதுமப்பா புதுமை பிறக்கும்
புண்ணியமிக்க பலமும் கூடி
பூதலம் பேரழிவிலா பாதுகாப்பும்
பெருமையும் கண்டு சிறக்கும்

10. சிறக்கவே சித்திகள் பெருகவே
சித்தமெல்லாம் முருகா என
மறுக்கா மறக்கா செபதபம்
மக்களெல்லாம் செய்துவர

11. வருகவே வையகம் மாறும்
வடிவேலன் ஆட்சியாக உலகம்
பெருமைபட கண்டு சிறக்கும்
புகன்றிய அருளாசி முற்றே

–சுபம்–